கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 29.11.2024 அ.வ.எண். 235/2019. வா.சா.1. கலாதேவி, த/பெ, சுப்பராயன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரிதான்,. என்-னுடைய சொத்திற்கு கிழபுறம் உள்ள ராஜ்குமார் என்பவருக்கு சொந்தமான சொத்தை பொறுத்து அ.வ.எண்.235/2019 என்ற வழக்கும்,அ.வ. எண். 366/2019 என்ற எண்ணில் என்னுடைய சொத்திற்கு மேல்புறமுள்ள மைதிலி என்பவருக்கு சொந்தமான சொத்தைப்பொறுத்து எனது கணவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அ.வ.எண்.235/2019 என்ற வழக்கு நான்குபுறமுள்ள அளவுகளை பொறுத்து பிரச்சனை அ.வ. எண். 366/2019 என்ற வழக்கில் அளவுகளில் வித்தியாசமும் எங்களது உரிமைகளை மறைத்தும் கிணறு இல்லை என்று கூறியதால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) என்னுடைய வீடும், மைதிலியின் வீடும் (366/2019 பிரதிவாதிகள் வீடும்) இணைந்து ஒரு C.S. சுப்பிரமணி என்பவருக்கு 1938 ம் வருடம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1938 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தான் 1962 ம் ஆண்டு ஒரு ராமன்டாக்டர் என்பவருக்கு சுப்பிரமணியத்தின் மனைவி ராஜம்மாள் மற்றும் பால தண்டாயுதம் என்பவர் சேர்ந்து அடமானம் வைத்து பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1938 ம் ஆண்டு பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை எனது மாமனாரான கைலாச முதலியார் என்பவருக்கு மேற்படி ராமன் டாக்டரால் made over செய்யபட்டு சுவாதினம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

3) 1938 ம் வருட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வீடு எப்படி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முன் பக்கம் ஓடு இரப்பு பின் பக்கம் தொட்டி கட்டு வீடு மேலே ஒரு அறை கொண்ட வீடு என்றால் சரிதான். கைலாச முதலியாருக்கு எனது கணவர் மற்றும் 5 பெண் மக்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மைதிலி, அவரது கணவர் அவரது மகன் மூவரும் சேர்ந்து 1938 ம் வருடத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் ஒரு பாகத்தை எனது கணவர் பெயருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு விற்பனை செய்த அளவு 1905 சதுர அடி என்றால் வீட்டின் அளவு மேற்கண்ட சதுர அடி அளவு தான். மேற்படி அளவு குறிப்பிட்டு தான் 2001 ம் ஆண்டு கிரயப் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல,. வீட்டின் அளவை மட்டும் மேற்கண்ட பத்திரத்தில் குறிப்பிட்டார்கள் காலியிடத்தின் அளவை குறிப்பிடவில்லை.

4) 2001 ம் ஆண்டு பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லை சக்குபந்தி சரியா என்றால் சரிதான். அதே போல் அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் சரியானதா என்றால் சரிதான். ஆனால் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டுஅளவுகள் மாறி யிருந்தது. 2001 ம் ஆண்டு பத்திரத்தின் அளவுகளின் படி சொத்தின் சுவாதினம் மற்றும் அனுபவம் என்வசம் இல்லை என்றால் சரிதான். 2001 ம் ஆண்டு பத்திரத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

5) வா சா ஆ 4 ன் படி தாள் 5 ல் இக்கிரய வீட்டையும் இடத்தையும் அளந்து அதிர் செய்த வரைபட பிரதி இரு சாராரும் கையெழுத்து செய்து தலா ஒரு பிரதி

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

வைத்துக்கொண்டுள்ளோம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த பிரதியை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுமென்றே வரைபட பிரதியை தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு தாக்கல் செய்தால் எனது இரண்டு வழக்குகளும் பாதிக்கப்படும் என்பதால் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. வரைபடத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். அந்த வரைபடத்தை தாக்கல் செய்தால் இரண்டு வழக்குகளின் முடிவுகளும் எளிதாகும் என்றால் சரிதான்.

6) 2001 ம் ஆண்டு எனது கணவரால் கிரயம் பெற்ற பத்திரத்தின் சொத்து விவரத்தில் பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை ஊர்க்கட்டில், 807 ஏ 1, ஏ 1, ஏ 1, ஏ 1 நத்தத்தில் 3 வது வார்டு, லட்சுமி நாராயண முதலியார் வீதியில், மேற்படிலட்சுமி நாராயணமுதலியார் வீதிக்கு தெற்கு , கிழமேல் பெரிய போது சாலைக்கு வடக்கு , எங்களுடைய குடியிருப்பு வீட்டிற்க கிழக்கு, ஆர். வசந்தன் வீட்டிற்கு மேற்கு இதன் மத்தியில் வடபுறம் கிழமேலடி 23 3/4 , தென்புறம் கிழமேலடி 19 1/2 கிழபுறம் , தென்வடலடி 93, மேற்புறம் வடக்கிலிருந்து தெற்கே 38 அடி பின் கிழக்கே 17 அடி பின்தெற்கே 10 அடி பின் மேற்கே 9 அடி இதிலிருந்து தெற்கே 18 1/2 அடி இதிலிருந்து மேற்கே 2 அடி பின் நேர் தெற்கே ரோடு வரை 37 அடி அளவுள்ள 1905 சதுரடி அளவுகள் உள்ள இடமும். என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 2001 ம் ஆண்டுகிரயம் பெற்றதற்கு பின்னிட்டு அதிலிருந்த வீட்டை இடித்துவிட்டு பத்திரத்தின் படி கண்டுள்ள 1905 சதுரடி முதல் தளம் வைத்து வீடு கட்டடப்பட்டது என்றால் சரிதான்.

7) அ.வ.எண். 366/2019 வழக்கில் மைதிலிக்கு பாத்தியப்பட்ட 2500 சதுரடி இதுநாள்

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

வரை அப்படியே உள்ளது என்றால் சரிதான் அவர்களின் வீட்டின் பின்னால் உள்ள கிணற்றிலிருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வருகிறோம் என்றால் சரிதான். தற்போது மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருகிறோமா என்றால் வருகிறோம் ஆனால் பத்து நாட்களுக்குமுன்பு கூட பிரதிவாதி மைதிலி தண்ணீர் பைப் லைனை துண்டித்து விடுவதாக வாடகைதாரரிடம் கூறினார். அதற்குமுன்பும் இதே போன்று இடையூறு செய்து வந்தார். மேற்படி மைதிலி வீட்டில்அமைந்துள்ள கிணற்றுக்கு வருவதற்கு என் வீட்டின்பின்னால் ஒரு தகர கதவு அமைத்து இரண்டு படிகள் வைத்து ஏறி வருவதற்கு ஏதுவாக அமைப்பு உள்ளது என்றால் சரிதான். அதை மறைத்து தான் 2019 ம் ஆண்டு மைதிலி அவரது பேத்திக்கு பாகம் செய்துள்ளார்.

8) மைதிலியின் பேத்தி விஷ்ணுபிரியா (2 ம்பிரதிவாதி) பெங்களூரில் இருந்தவருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது, 3 ம் பிரதிவாதி கரூரில் இருந்து வருகிறார் என்றால் சரிதான் , அந்த வீட்டில் தற்போது மைதிலி மட்டும் தான் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். மைதிலிக்கு சுமார் 80 வயதிற்கு மேல் ஆகிவிட்டது என்றால் 75 வயது இருக்கும். நான் இரு வழக்குகளிலும் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியும்.

9) இந்த தாவாவில் ராஜ்குமார் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சி ஷெட்யூல் சொத்துக்கள் மட்டும் தான் எங்களது சுவாதினத்திலும், அனுபவத்திலும் இருப்பதாக

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்படியென்றால் சி ஷெட்யூல் சொத்து விவரம் குறித்து நான் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். எங்களுக்கு கிரயம் கொடுத்த போது சரியான அளவுகள் கொடுத்து கிரயம் செய்யவில்லை. அதே போல் சக்குபந்தியும் சரியாக கொடுக்கவில்லை என்றால் வசந்தன் வீட்டிற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுக் குசொந்தமான 2001 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணத்தின் படி உள்ள சொத்தில் தான் ராஜ்குமார் இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

10) வசந்தன் வீட்டிற்கு மேற்கு, வடபுறம் 23 3/4 அடி என்னுடைய சுவாதினத்தில் உள்ளது என்றால் மேலும் 3 அடி என்னுடைய சுவாதினத்தில் தான் இருந்து வருகிறது அப்படியென்றால் 2001 ம் ஆண்டு பத்திரத்தில் 23 3/4 அடி என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் சரிதான்., 2001 ம் ஆண்டு பத்திரப்படி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கும் தவறு என்றால் சரியல்ல. 2001ம் ஆண்டு பத்திரத்துடன் வரையப்பட்ட வரைபடத்தின் அளவுகளின் படி நீதிமன்ற ஆணையரை வைத்து தாவா சொத்துக்களை அளக்க தயாரா என்றால் (சாட்சி எவ்வித பதிலும் அளிக்கவில்லை), 2019 ம் ஆண்டு பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் சரிதான். எந்தெந்த அளவுகள் தவறு என்று எனக்கு தெரியுமா என்றால் கிழமேல் அளவுகள் தவறாகும்,.

11) அ. வ. எண். 366/2019 ல் எந்தெந்த அளவுகள் தவறு என்று என்னுடைய வழக்குரையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் பத்திரப்படி வழக்கினை தாக்கல்

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,பொள்ளாச்சி

செய்துள்ளேனா அல்லது சுவாதினத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரப்படியும், சுவாதினத்தின் படியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு சொல்வது தவறு என்றும் பத்திரப்படி தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் இந்த வழக்கு ராஜ்குமாருக்கு எதிராக தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. 2001 ம் ஆண்டு பத்திரத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளஅளவுகளுக்கு எதிராகத்தான் மைதிலி செயல்படுகிறார் என்றால் சரிதான். அவ்வாறு மைதிலி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளஅளவுகளுக்கு எதிராக செயல்படுகிறார் என்பதை நிரூபிக்க வரைபடத்தை தாக்கல் செய்தால் நீதிமன்றத்திற்கு உண்மை புலப்படும் என்றால் சரிதான். வரைபடத்தை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வர முடியாததால் அந்த வரைபடத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

12) பிரதிவாதி மைதிலி கிணற்றில் தண்ணீர் எடுப்பதை தடுத்த விவரம் குறித்து காவல்நிலையத்தில் புகார் ஏதேனும் நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2001 ம் ஆண்டு வரைபடம் யார் வசம் உள்ளது என்றால் சார் பதிவாளர் அலுவலகத்தில் CA போட்டு எடுக்கவேண்டும். 2001 ம் ஆண்டு கிரயம் பெற்ற சொத்தில் உள்ள வீட்டில் நான் தற்போது குடியிருந்து வருகிறேனா என்றால் தொடர்ச்சியாக குடியிருக்கவில்லை அவ்வப்போது வந்து செல்வேன். மேற்படி வீட்டில் வாடகைக்கு குடிவைத்துள்ளேனா என்றால் 5 குடும்பங்களை குடி வைத்துள்ளேன்.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

13) மேற்படி 5 குடும்பங்களுக்கு மைதிலி வீட்டில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தான் தண்ணீர் செல்கிறது என்றால் எங்களுக்கும் பாதி பங்கு பாத்தியப்பட்ட கிணற்றிலிருந்து தான் தண்ணீர் எடுத்து வருகிறோம். மேற்படி இடத்தை அளப்பதற்கு ராஜ்குமார் நில அளவையரை வைத்தார் என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட சுவரையும் சேர்த்து ராஜ்குமாருக்கு பாத்தியப்பட்டது என்று கூறியதால் நிலஅளவையரை அளக்க விடாமல் திருப்பி அனுப்பிவிட்டு வழக்கு தாக்கல் செய்தேன்.

2001 ம் ஆண்டு கிரய பத்திரத்தோடு கூடிய வரைபடத்தை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்வதாக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கோரியதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி